GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

FAXA

**6592–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Fifth Year – Tenth Semester

CRIMINOLOGY AND PENOLOGY

Time : $2\frac{1}{2}$ hours                                                    Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the reasons for female criminality? Suggest various steps to control female criminality.

   பெண்களின் குற்ற நடத்தைக்கான காரணங்கள் யாவை? பெண்களின் குற்ற நடத்தையை கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை பரிந்துரைக்கவும்.

2. Describe the Bonger's theory of economic structure and crime.

   பாங்கரின் பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் குற்றவியல் கோட்பாட்டை விவரிக்கவும்.

3. Describe the contribution of Lombroso to the development of Criminology.

   குற்றவியலின் வளர்ச்சிக்கு லாம்ரசோவின் பங்களிப்பினை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "In murder cases, Life Imprisonment is a rule, death sentence is an exception". Elucidate the statement in the light of criminal justice system.

   "கொலை வழக்குகளில் ஆயுள் தண்டனை என்பது விதி, மரண தண்டனை என்பது விதிவிலக்காகும்" - இக்கூற்றினை குற்றவியல் நீதியமைப்பின் துணை கொண்டு தெளிவாக்குக.

5. Describe the important characteristic features of Juvenile Justice Board.

   இளஞ்சிறார் நீதிக் குழுமத்தின் தலையாய குண இயல்புகளை விவரிக்கவும்.

6. Narrate the kinds of punishments awarded to criminals from ancient to modern period in India and explain the punishment that is feasible in reforming criminals.

முந்தைய காலங்களிலிருந்து, இன்றைய காலம்வரை இந்தியாவில் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் தண்டனை வகைகளை விவரிக்கவும் மற்றும் எவ்வகையான தண்டனை குற்றவாளிகளை சீர்திருத்துவதற்கு உகந்தது என்பதை குறிப்பிடவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) E-mail frauds

மின் அஞ்சல் மோசடிகள்

(b) Borstal School

சீர்திருத்தப் பள்ளி

(c) Incorrigible offenders

திருத்த முடியாத குற்றவாளிகள்

(d) Identification of potential delinquency

கடமை வழு ஆற்றமைவு அறிதல்

(e) Incapacitation

தகைக் கேடாக்கல்

(f) Cartographic school

நிலவியல் கருத்தாய்வு குழுமம்

(g) Double Jeopardy

இரட்டை இடர்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The court of sessions has rejected the bail application of A, a child, on the ground that the release of the petitioner may affect the trial in the main case. Decide.

'A' என்ற ஒரு குழந்தையின் ஜாமீன் விண்ணப்பத்தினை, அமர்வு நீதிமன்றம், மனுதாரரின் விடுதலையானது இம்முக்கிய வழக்கின் விசாரணையை பாதிக்கலாம் என்ற காரணத்திற்காக நிராகரித்தது. தீர்மானிக்க.

9. Mr. X has been arrested and kept in the prison without conducting any trial for 14 years. Advise him.

திரு X என்பவர் கைது செய்யப்பட்டு, 14 ஆண்டுகளாக எவ்வித விசாரணையும் இன்றி சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு அறிவுரை வழங்குக.

10. Raghavan filed a mercy petition before the Governor of the State. But the Governor has rejected his petition after a long delay of 10 years. He wants to go to the Supreme Court against the order of the Governor. Whether he will succeed in his action. Decide.

ராகவன், ஒரு கருணை மனுவினை கவர்னரிடம் தாக்கல் செய்தார். கவர்னர் 10 ஆண்டுகள் நீண்டகால தாமதத்திற்குப் பின் மனுவினை நிராகரித்தார். அவர் கவர்னரின் ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றம் செல்ல விரும்பினார். இதில் அவர் வெற்றி பெறுவாரா? தீர்மானிக்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

FAXB

Register No.

6593–25

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Fifth Year – Tenth Semester

INTELLECTUAL PROPERTY LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define "Passing off". Discuss the marks that are registrable and non-registrable under the Trade Marks Act.

   "வணிகப் போலிகள்" என்பதை வரையறை செய்க. வணிக முத்திரை சட்டத்தின் கீழ் பதிவு செய்யத்தக்க மற்றும் பதிவு செய்ய இயலாத வணிக முத்திரைகள் குறித்து விளக்குக.

2. Narrate what can amount to infringement of patent? What are the remedies available for infringement of patents under the Patents Act, 1970?

   காப்புரிமையை மீறுவது என்றால் என்ன என்பதை விவரிக்கவும். காப்புரிமை சட்டம் 1970ன் கீழ் காப்புரிமை மீறலுக்கு எதிரான தீர்வழிகள் யாவை?

3. Explain the remedies available in respect of Copyright Infringement.

   பதிப்புரிமை மீறுகையின் போது உள்ள தீர்வழிகள் என்ன என்பதை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the objects and salient features of the Designs Act, 2000.

   வடிவமைப்புகள் சட்டம் 2000ன் நோக்கம் மற்றும் சிறப்பியல்புகளை விளக்குக.

5. Explain the terms of copyright to various subject matters under the Copyrights Act 1957.

பதிப்புரிமை சட்டம் 1957ன் கீழ் பல்வேறு பதிப்புரிமை படைப்புகளின் பதிப்புரிமை காலம் பற்றி விளக்குக.

6. Discuss the effects of TRIPS Agreement on Trade Mark Law in India.

இந்திய வணிகக்குறி சட்டத்தின் மீதான தொழில் சம்பந்தப்பட்ட அறிவுசார் ஒப்பந்தத்தின் தாக்கம் குறித்து விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) World Trade Organisation

உலக வர்த்தக அமைப்பு

(b) Anton Pillar Order

ஆண்டன் பில்லர் ஆணை

(c) Rights of a Patentee

காப்புரிமை பெற்றவரின் உரிமைகள்

(d) Collective trade mark

கூட்டு வணிக முத்திரை

(e) Confidential Information

இரகசிய தகவல்

(f) Rights of Broadcasting Organisation

ஒலிபரப்பு அமைப்பின் உரிமைகள்

(g) Process Patent

செயல்முறைக்கான காப்புரிமை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mithra is a Siddha doctor. She discovers the new use of herbal medicine from Aleovera. She wants to apply for grant of patent. Can she get patent for her Invention? Advise her.

மித்ரா என்பவர் ஒரு சித்த மருத்துவர். அவர் கற்றாழையிலிருந்து எடுக்கப்பட்ட மூலிகை மருந்தில் இருந்து அதன் புதிய பயன்பாட்டினை காப்புரிமை பெற விண்ணப்பிக்க விரும்புகிறார். அவரது கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை பெற இயலுமா என அறிவுரை செய்க.

9. Ashok hires a theatre belonging to Maya and he exhibits a movie to the public. Gautam, the producer of the movie, came to know that the film is a pirated copy of the original. He filed a case against Ashok and Maya. Decide whether Maya, the owner of the theatre, has committed any infringement.

அசோக் என்பவர் மாயாவிற்கு சொந்தமான திரையரங்கை வாடகைக்கு எடுத்து பொதுமக்களுக்கு ஒரு திரைப்படத்தை திரையிட்டு வருகின்றார். அந்தத் திரைப்படத்தினுடைய தயாரிப்பாளர் கௌதம் என்பவர் அந்தத் திரைப்படமானது தனது அசல் பதவிலிருந்து திருடப்பட்ட நகல் என்பதை அறிந்து அசோக் மற்றும் மாயா ஆகியோருக்கு எதிராக வழக்கிடுகிறார். திரையரங்கு உரிமையாளரான மாயா ஏதேனும் உரிமை மீறல் புரிந்து உள்ளாரா? தீர்வு செய்க.

10. Ashwini has been manufacturing goods under the registered trademark "LAKME". Suwathi another manufacturer begins to manufacture similar goods under the name "LUCKMY". Advise Ashwini.

அஸ்வினி என்பவர் "LAKME" என்னும் பதிவுபெற்ற வணிகமுத்திரையின் கீழ் பொருட்களைத் தயாரித்து வருகின்றார். சுவாதி என்னும் மற்றொரு உற்பத்தியாளர் "LUCKMY" என்னும் பெயரில் அதே பொருட்களைத் தயாரிக்கத் தொடங்குகிறார். அஸ்வினி அவர்களுக்கு அறிவுரை வழங்குக.

---

GOVERNMENT LAW COLLEGE, TRI...
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**TA36**

**6762–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Three-year Regular Course)

Second Year – Third Semester

INTERPRETATION OF STATUTES

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The function of the judge is not to make law but to declare the law". – Comment.

   "ஒரு நீதிபதியின் பணி சட்டத்தை அறிவிப்பதே தவிர சட்டத்தை இயற்றுவதில்லை" – கருத்துரை தருக.

2. Explain the things to be discussed and considered while using the Mischief Rule in the interpretation of a statute.

   கேடு அகற்றும் விதியைப் பயன்படுத்தி ஒரு சட்டத்தின் பொருள் விளக்கம் காணும் வேளையில் எவைகளை கருத்தில் கொண்டு விவாதிக்க வேண்டும் என்பதை விளக்கவும்.

3. Explain about the provisions relating to orders and rules mentioned in General Clauses Act, 1897.

   பொதுவகையச் சட்டம் 1897-ல் குறிப்பிட்டுள்ள ஆணைகள் மற்றும் விதிமுறைகள் தொடர்பான வகையங்களைக் குறித்து விவரிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கு ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain about the internal aids to interpretation.

   செய் சட்டப்பொருள் விளக்கம் காண்பதற்காக பயன்படும் அகக்காரணிகளை விளக்குக.

5. State the rules followed by the courts while interpreting a penal statute.

   நீதிமன்றங்களில் தண்டனை சட்டங்களில் பொருள் காணல் குறித்த விதிகளைக் கூறவும்.

6. Discuss the role of Doctrine of Occupied Field in construction of the Constitution.

அரசமைப்புச் சட்டத்தில் பொருள் விளக்கம் காண்கையில் கைப்பற்றப்பட்டுள்ள பகுதி என்ற கோட்பாட்டின் செயல்பாட்டை விவாதிக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Parliamentary History

பாராளுமன்ற வரலாறு

(b) Supreme Legislation

உச்ச சட்டம்

(c) Logical interpretation

தருக்கமுறை பொருள் விளக்கம்

(d) Remedial statutes

தீர்வழிச் சட்டங்கள்

(e) Noscitur a sociis

தொடர்பு கண்டு பொருள் கொளல்

(f) Saving Clause

காப்பு சட்டக்கூறு

(g) Litera legis.

சட்ட வாசகத்திற்கு இணங்கப் பொருள் காணல்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The question before the Apex Court is whether 'food colours' were dyes and 'syrup essences' were scents and perfumes within the meaning of notification issued under 'X' State's Sales Tax Act 1948. Petitioner challenged the interpretation of words in the statute. Explain.

'X' என்ற மாநில விற்பனை வரிச்சட்டம் 1948-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் பொருளில் 'உணவு வண்ணங்கள்' என்பது சாயங்கள் எனவும் மற்றும் 'சிரப் எசன்ஸ்கள்' என்பது வாசனை பொருட்கள் என்றும் கூறப்பட்டது குறித்து உச்ச நீதிமன்றத்தின் முன் கேள்வி எழுந்தது. மனுதாரர் இதனை நீதிமன்றத்தின் முன் சட்டத்தின் விளக்கம் கேட்டு முறையீடு செய்கிறார். விவரிக்க.

9. Ramu was dismissed from service based on the findings under the Public Service Enquiry Act, 1960. Subsequently he was prosecuted under various offences of the Prevention of Corruption Act and the Indian Penal Code. Is this sustainable? Advise.

பொதுப் பணியாளர் விசாரணைச் சட்டம் 1960-ன் கீழ் விசாரணை முடிவுகளின் அடிப்படையில் ராமு என்பவர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார். அதன்பின்பு, அவர் மீது லஞ்ச தடுப்புச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பல்வேறு பிரிவுகளில் வழக்குத் தொடரப்பட்டது. இது நிலை நிற்கத்தக்கதா? அறிவுரைக்க.

10. The parliament passed a Constitutional Amendment making changes in the constitutional provisions relating to the election of the President. This was challenged on the ground that the consent of the states were not obtained before the Amendment. Decide.

பாராளுமன்றம் அரசமைப்புச் சட்டத்தின் வாயிலாக குடியரசுத் தலைவர் தேர்தல் தொடர்பான அரசமைப்புச் சட்டப்பிரிவுகளில் மாற்றம் கொண்டு வந்தது. இந்தச் சட்ட திருத்தத்தை கொண்டு வருவதற்கு முன் மாநிலங்களின் ஒப்புதல் பெறப்படவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் இச்சட்டத் திருத்தம் எதிர்க்கப்படுகிறது? தீர்மானிக்கவும்.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY